# ஏசுநாதர் சரிதை

# JESU NATHER SARITHAI

BY

SWAMI SHUDDHANANDHA BHARATI

20 JUL 1927

2601

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA


Madras Allahabad Rangoon Colombo

1927

Price, 5 As விலை, 5 அணா

Qb·33
N27
85958

சுவாமி சுத்தானந்த பாரதியார்.



எல்லா வுலகிற் கிறைவ னொருவன்
எல்லா வுடலும் இறைவ னாலயமே.

534
232·9

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 JUL 1927
MADRAS

## சிலுவையில் ஏசுநாதர்.




பிறருய்யத் தான் வருந்து பேர்வாழ்வே வாழ்வு.

# ஏசுநாதர் சரிதை

# JESU NATHER SARITHAI

BY

SWAMI SHUDDHANANDHA BHARATI

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD RANGOON COLOMBO

1927

20 JUL 1927
MADRAS

# முன்னுரை

என் நண்பர் சுவாமி சுத்தானந்தபாரதியார் எழுதிய 'ஏசுநாதர் சரிதை' என்னும் நூலை நான் கண்ணுற்று அகமகிழ்ந்தேன். பாரதியாரவர்களின் குணாதிசயங்களை நான் நன்குமதிக்கிறேன். அவர்கள் நூலிற் காணப்படும் பொருள் மிகச்சிறந்தது. என் ஆண்டவர் ஏசுபெருமானது மேன்மையை மற்றுள்ளோர் அறிந்துகொள்வது எப்பொழுதும் மகிழ்வுறுத்தும் காரணமாயிருக்கிறது. ஸ்ரீ பாரதியார் எல்லாவற்றுள்ளும் மேம்பாடான பொருளைக்குறித்து இன்பக்கவிகளையியற்றித் தமிழ்மொழியில் ஏசுபெருமானது மேன்மையைச் சிறப்பித்துக் காண்பித்தனர். பொருள் மாண்பும், சொற்சுவையும், கவிநயமும், இலக்கணத்திறமையும், வாய்ந்த இந்நூலானது யாவரும் நன்குமதித்து ஆனந்தபரவசத்துடன் வாசிக்கத்தக்கது. இச்சிறிய புத்தகத்தில் ஸ்ரீ பாரதியார் இனிய நடையுடன் மேம்பாடான பொருளை யாவரும் அறியும் வண்ணம் விளக்கியுள்ளார். இயேசுபெருமானது அரிய போதனையும் பெரிய சோதனையும் இதிலே இனியமொழியும், பேரழகுமுள்ள பாக்களினாலே விளங்கப் பண்ணினார்.

எச்சமயத்தாராயினும் இந்நூலை வாசிக்கும்போது பக்தி மூண்டெழுந்து கடவுளின் திருவருளைப் பெறவேண்டுமென்னும் அவாவைக் கொண்டு, நன்னெறிவளர்ச்சி யுடையவர்களாக முயலுவார்கள் என்பது திண்ணம். தமிழ்நாட்டிற்கேற்ற முறையில் லோகரட்சகனது திருச்சரிதையை ஆக்கியோன் எழுதி வெளியிட்டதைப்பற்றி பக்தர் யாவரும் களித்து, மிக்கக் கரிசனையுடன் இச்சிறு நூலை வாசித்திருப்பர் என்பது எனது துணிபு. இப்பாடல்களைப்பாடிய பாரதியார் ஏசுபெருமானது சரிதையை மிக்கத்தெளிவுடன் விளக்கிக்காட்டினர் என்று கண்டு அவருடைய திறமையையும் ஸமரஸபக்தியையும் அதிக மெச்சிக்கொண்டு மகிழுகிறேன். இதை வாசிப்போர் எல்லாரும் ஏசுபெருமானது மாண்பைக்கண்டு அவரது போதனையினால் பக்திவிருத்தியடைவார் என்பதற்கு ஐயமின்று.

இந்நூலானது இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்க்கும் ஆத்மீகார்த்தத்திலே அதிக நன்மை பயக்கும் என்று சந்தேகமின்றியே சாதிக்கின்றேன். ஆகையால் அநேகர் இதை வாங்கி வாசிப்பார் என்று நம்பி இந்நூலை என் நண்பர் யாவருக்கும் முழுமனதுடன் புகழ்ந்து காண்பிக்கிறேன்.

மதுரை
15-9-1926

எச். ஏ. பாபுலி.

# ஆக்கியோனின் முன்னுரை

ஏசுநாதர் சரிதையை 'ஸமரஸபோதினி' யில் அச்சிடுவதற்குப் பல மாதங்களுக்கு முன்னேயே எனது நண்பர் எச். ஏ. பாபுலி அவர்களுக்கு அனுப்பினேன். அவர் எனது சிறு காவியத்தில் அளவற்ற களிப்புற்று எழுதியிருந்தார். அதை வெளியிடவும் ஏற்பாடு செய்தார். இம்மாதிரியே இனிய செய்யுளில் புத்தர், முகம்மது, நானகர், சிவாஜி, பிரதாப்சிங், குருகோவிந்தன், திலகர், காந்தி முதலியோர் காதைகளும் வெளியிடத் தயாராக உள்ளன. சர்வ மத ஒற்றுமையையும், உலக சமாதானத்தையும், மனித சமூகத்தின் அத்யாத்ம வளர்ச்சியையும் உத்தேசித்துத் தீர்க்கதரிசிகள் வாழ்க்கை, உபதேசங்களைக் காவியங்களாக வெளியிடக் கருதியுள்ளேன். இரவில் கிராமங்களில் புராண காலட்சேபமாகப் பெரியோர் காதைகளைப் படித்து ஜனங்களுக்கு ஸமரஸமும் ஆத்ம சுத்தியும் பிறக்கவேண்டுமென்பதே என் இலக்கிய முயற்சிகளின் நோக்கம். அதற்கு எவ்வெவ்வகையில் உதவ அன்பரின் திருவுளமோ அவ்வவ்வகையில் அன்பர் உதவுவாராக.

"சுத்தஞ் சுதந்திரமுந் தோற்றுஞ் சமரஸமே
இத்தலத்தோர்க் கின்ப நெறி."

ஆசாரியார் "சக்திநிலையம்"
பாலையூர்,
முத்துப்பேட்டை (S.I.R.)
தஞ்சை ஜில்லா.

அன்பன்,
சுத்தானந்த பாரதி.

ஓம்

கடவுள் துணை

# ஏசுநாதர் சரிதை

(சுவாமி சுத்தானந்த பாரதியார் பாடியது)

காப்பு

பூவெலாம் புனி தம்பெறப் பூத்தருள்
மேவி, யன்பு மிளிர்ந்து, நுகர்ந்தவர்
நாவெலாஞ் சுவை நல்கிடுஞ் சோதிமேற்
பாவெலாஞ் சக்தி யன்னையின் பாவரோ!

## க. வணக்கம்

திங்கள் வானிற் சிரித்து விளங்குவாள்!
செங்க திரில் திருமுகங் காட்டுவாள்!
பொங்கு நெஞ்சினிற் பூத்திடும் பாமலர்
எங்கள் நாயகிக் கின்புறு மாலையே!

வெற்றி யீந்திடு வித்தகி சக்தியென்
சிற்றி லீந்திடுந் தெள்ளிய அன்பினைப்
பெற்று மீந்த பெருஞ்சுதைப் பாவினில்
இற்றை யூற்றினன் ஏசுவி னின்கதை.

தேசு லாவுந் தியாகத்தி னெல்லையைப்
பேசு வாழ்விற் பிறங்கிய தேவனும்
ஏசு நாதனை ஏத்தி யிசைத்திட,
ஆசி பெற்றது மன்னவ னன்பரோ!

பத்தியாற் பரி சுத்தம் படைத்தெழில்
சித்தர், மாந்தரின் சேமத்திற் கேதமை
யொத்த அன்பொ டுதவுவர் மெய்ப்புகழ்
சக்தி யாணையிற் சாற்றவிந் நாவரோ!

எள்ளு மிவ்வுல கின்னிடர் தாங்கியும்
உள்ள வுண்மைக் குழைத்தறம் பாலித்த
வள்ளல் வானவர் வன்பணி யாற்றவே
அள்ளி யாவி யளிப்பதென் ஞசையே!

## உ. ஏசுநாதர் பெருமை

விண்ணவன், பொறுமைக்கெல்லை விண்டவன்; அன்பினூ
மண்ணவன்; மாந்தருய்ய வன்பணி செய்த இன் சொற்
றண்ணவன்; தருமமுய்யத் தந்தவன் றனேயே; ஞானக்
கண்ணவன் வேதம்; மாந்தர் கருத்தவன் அமரவாழ்வே!

பூவியற் புரைகள் போக்கப் புண்ணியம் புரிந்த நாதன்
தேவியற் குணத்தால், வெய்ய தீமையே தொழிலாய்ச் செய்த
பாவியர் தமக்கு மன்பன்; பரிவதே பிலிற்றுங் கண்ணன்;
ஆவியைப் பலிகொடுத்தோன் அறத்திறஞ் சிறக்கவம்மா!

அருந்தவத் தான்மசக்தி யாணுருப் பூண்டதன்னன்;
பெருந்தவத் தொளியால் ஞானம் பிறங்குறும் ஆசியாவின்
இருந்தவக் கதிரோன்; கீழேயெழுந்து மேற்றிசையுமெங்கும்
பொருந்திய சான்ருேனெங்கள் பூசனேக்குரிய நாதன்!

காமமுங் கொலேயுங் கள்ளுங் கரவுடை வஞ்சர் தம்மின்
நாமமுங் கலக மின்னல் நாமெனுஞ் செருக்குந் தீய
தாமவை யெவையுமல்கித் தாணியில் நிரயமாகத்
தோமுறு யூதநாடு தொத்துழன் றிருந்ததம்மா!

அன்பினே யுருவாய்க்காட்டி, அமைதியிற் பழுத்தசெஞ்சொல்
மன்பதைக் கறத்தையூட்ட, மற்றதன் வழியே வந்த
துன்பதைத் துணேயாய்க் கொண்டே தொல்புவிவாழத்தெய்வ
வன்பணிக் காவியீந்த மாதவன் சரிதை கேளீர்.

## ௩. மரியாள் மாண்பு

அணிக்கணி செய்யுஞ் செவ்வி, அகத்திலும் புறத்துந் தூயள்,
கணிக்கருங் கற்பின்மிக்காள், கருணேயி னன்னே; தெய்வப்
பணிக்கணி யாகவந்திப் பாரினேக் காத்தோன், அன்னுள்
மணிவயிற் றுதித்தானென்னில் மாண்பிதிற் பிறிது முண்டோ?

கோசலை வாழி! வீரக் குரிசிலையீன்றாள்; அந்த
வாசவற் பயந்த வன்னை வழி வழி சிறக்க வாழி!
பூசனை யுடனே வாழீ புத்தனை யளித்த மின்னாள்!
ஏசுவைப் பெற்றாள் வாழீ! இவர்கொலோ வுலகினீன்றார்.

பன்னரும் பாக்கியத்தாள், பரிவுடைத் திருவின் மிக்காள்,
அன்னையாம் மரியாள் அன்பின் ஆழியா முளத்தாள், செய்ய
கன்னியர் திலக மானாள்; கடவுளங் குணத்தாள் அந்த
அன்னத்தின் அகட்டி லன்றோ ஆண்டவன் கருவளர்ந்தான்.

யோசேப்பு மரியாளை மணத்தல்

கருவுடைச் செவ்விதன்னைக் கடிமணம் புரிந்த நல்லோன்
உருவு கொண் டொளிரு மற்றோர் உருவிலி * போன்ற தோற்றம்
மருவிய யோசேப் பென்னும் மரத்தொழிற் புலவ னன்னான்,
அருநறுங் குணத்தில் மிக்கான் அப்ரஹாம் மரபிற்பூத்தோன்.

மயங்கினன் கருவை யெண்ணி; வந்தொரு தேவதூதன்
தயங்கிடல்! தூயள் மேரி; தரித்தனள் கடவுட் சேயை
வயங்கிடு மதற்கே ஏசு கிருத்தென வழங்கு கென்றே
நயங்கிளர்ந் தொருகனவில் நவின்றிட ஐயந் தீர்ந்தான்.

## ௨. ஏசுநாதர் பிறப்பு

மங்கல மனையறத்தை வாழ்முறை நடத்தி நல்லோர்,
தங்கினர் நாசரத்தில்; தரணிப னந்த நாளில்
வெங்குணன் ஏரோதாவன்; விளம்பினன் ‘யூதநாட்டின்
சங்கையைக் கணிப்போம்; தத்தம் ஊர்களிற் சார்க’ வென்றே.

யோசேப்பும் மேரியும் பெத்தல்ஹாம் அடைதல்

பிள்ளையைச் சுமந்தாளோடும் பிறந்தவூர் பெத்தல் ஹாமை
நள்ளிரவதனில் யோசேப் நாடின னங்கு மாந்தர்
எள்ளிட இடமிலாதே யெங்கினு நெருங்கத் தேடிக்
கொள்ளிட மற்றோர் மாட்டுத் தொழுவத்திற் குந்தினாரே.

வையகம் மகிழ்வாற் பொங்க வானகம் புதுமீன்காட்ட
உய்யுமென் றுவகை தூண்ட யூதரின் கலிதீர்ந்தன்ன
செய்யமா வுணர்ச்சி சேரச் செருவெலாம் அமைதியாக
ஐயனும் அகட்டை நீத்தே யம்புவிக் கவதரித்தான்.

* மன்மதன்,

காத்தினில் மதியோ! பொன்னிற் கதிர்விடு வைரவைப்போ!
பாத்துடைப் பெரிய வின்பம் பாரினிற் பிறந்ததேயோ!
சிரித்தலர் கமலம்பூத்த திருவுடன் பொலியு மேசு
கிருத்துவக் கனியே பூவின் தவத்தினுற் கிடைத்ததம்மா!

இரவினைப் பகல்செய்மீனை வியந்திரண் டிடையர் கண்டார்;
மருவியோர் தேவதூதன் மாநிலங்காக்குஞ் சேயின்
வரவினை யுரைத்தான்; அந்த வானவச் சேயைக்கண்டு
[1] பரவின ரிடையர் நெஞ்சிற் பதித்தனர் உதித்த சீரை!

## ரு. முனிவர் மூவர்

கண்டனர் புதுமீன்; அன்னே கடவுட்சேய் பிறந்தமாற்றம்
விண்டனர்; ஏரோதின்பால் விரைந்தனர் முனிவர் மூவர்:
'மண்டல மன்ன! யாங்கள் குணதிசை; வணங்க வுன்நா
டண்டினம் புதுமீன் காட்டும் அப்பெரு மமரச்சேயை.

எங்கந்த யூதர் மன்னன் அவதரித் திலங்கும்?' என்ன
வெங்கதத் திகிற்கொண்டானும் வினவத்தன் னமைச்சர் ஆய்ந்தே
தங்குறும் பழநூல் யூதர் தரணிபன் பெத்தல் ஹாமில்
மங்குற வுலகமாயை வருவனென் றுரைக்கு மென்றுர்.

காணுமின்! விரைமின்! வந்து கழலுமின்! யானுஞ்சென்றே
காணுது மென்றுன் வஞ்சங் கரந்திடு முறுவல் மன்னன்;
மாணுயர் முனிவர் சென்றுர்; வழியிலவ் விடைய ரன்பு
பேணுறத் தெய்வச் சேயின் பிறப்பிட மருகு நின்றுர்.

'உய்யுமிவ் வுலகம்; உண்மை யுயர்ந்திடு மன்பு பொங்கும்;
செய்யசே யிடமே வைகுஞ் செகத்துடைச் சேம' மென்றே
மெய்யனை வணங்கி வாழ்த்தி, விண்ணவனொருவன் சொல்ல
வெய்யனே ரோதைத் தப்பி விரைந்தனர் புனித நல்லார்.

கண்ணிறைக் கவினிற் பெற்றேர் களித்தனர்; கனவிற்றேன்றி
விண்ணவனுரைப்பன்: 'யோசேப்! விரைதெழுந் தெகிப்தமேகு!
மண்ணவன் தேடுகின்றுன் மதலையின் ஆவி; தீவெங்
கண்ணவன்' என்றே; ஆங்கு கடுகினர் குதலையோடு.

---

[1] வணங்கினர்.

62
12-47

## ௬. கொடிய ஏரோது

முனிவரும் வருதல் காணான் ; மொழிபவரெவரு மில்லான்.
இனிவரும் யூதநாட்டை யின்புட னன்பினாலே
தனியர சாளு மென்ற தனயனெங் கொளிந்தானென்றே
சனியிடம் பெத்தல் ஹாமில் தளர்ந்தனன் தேடித் தேடி.

ஆற்றிலன் ; சேயை நெஞ்சில் அனலுக நினைத்தான் ; கண்கள்
சீற்றமோ டுயர்ந்த ; கைகள் செருக்குட னெரியு மெஃகை
ஏற்றின ; இடியுமஞ்ச இறைந்தது குரலு மாங்கே
கூற்றினுங் கொடியர் தம்மைக் கூவினன் கொலையு மஞ்ச.

“ ஒளிந்துளன் சேயுட் சேயாய் ; ஒட்டுமின் இரக்கம் ; இன்றே
குளிர்ந்திட வென்றனுள்ளம், கொதித்திட அவனைப் பெற்றோர்,
இளந்தளிர்ச் சேய்கள் செந்நீர் இறைகுமின் பெருக ஆறாய் ;
பிளந்தன்றோ பலாவுள் தீய சுளையினைப் பிரித்த ” லென்றான்.

மின்னிட வாட் கணங்கள், இடிகுரற் கொடியர் மேவித்
துன்னினர் வீடுதோறுந் துடித்திடத் துணித்தார் அந்தோ!
அன்னைய ரலறத் தீதில் இளங்கறை யாறாயோட
மன்னுல கிரத்தக் கண்ணீர் மாரியாய்ப் பொழிந்த தம்மா.

எண்ணினான் கரந்தசேயு மிறந்ததென் றுகந்த காலை
நண்ணினான் காலவேடன் ; நவையுறு மாவிதன்னை
யுண்ணொச்சிலை தொடுத்தான் ; ஒழிந்தனன் ஏரோதாங்கு ;
மண்ணொ மறைந்த தந்த மணிமுடி மமதையாக்கை!

## ௭. யோசேப்பு நாசரத்திற்கு வருதல்

85958

அன்றெகிப்தினிற் கரந்துரை யருந்தவ முனியார்
பொன்றினான்புவிப் பொறையெனும் புலமையுடை யரசன்
என்று கேட்டலு மேகினர் இஸரவேல் நாட்டில்
ஒன்றி வாழ்ந்தனர் நாசரத் தெனு மொரூரகில்.

யோசப்பங்கொரு தச்சனா யொழுக்குட னுழைத்தான்
நாசரேனெனும் பெயருடன் நலத்தினிற் றிகழும்
ஏசுநாதனு மிளந்தொழி லாளியாய்ப் பயின்றான் ;
தேசுடன் பிறந்தேயினுங் கற்றனன் சிறிதே.

பிறவியாற் பெரியோன்; ஒளி பிறங்குறுந் தேவன்;
மறவியாற் பிணி மாந்திடும் மாநில மருந்தாம்
அறிவினன், படிப்பறிவரு பொருளுடை யண்ணல்; [ன்;
பொறையும் வாய்மையும் அன்பொடும் பொருந்திடப் பொலிந்தா

பெற்றவர்தமி னன்பையும், பேசிடு மொழியால்
உற்றவர்தமின் அன்பையும், உலகெலாமுய்யும்
நற்றவத்துடை யன்பையும் நயந்தனன், வருந்திக்
கற்றதன்பவன் கழன்றதுங் கடவுளின் அன்பே.

நாடிழந்தய லாட்சியில் நலிந்தனர்; தருமப்
பீடிழந்தனர்; மக்களாய்ப் பிறந்தனரேனும்
வீடிழந்தனர்; விலங்கென வாழ்ந்தனர்; காமக்
காடுழன்றவர் கலியறக் கருணையில் வளர்ந்தான்.

## அ. யோவான்

'வருந்துமின் பிழை! வழியினைத் துலக்குமின்! அறிவைப்
பொருந்துமின்! புனலாடுமின்! புனிதமேயாமின்!
பெருந்திறத்தொடு வருகுனன் பின்னரே! பூமி
வருந்து தீமைகளொழிந்திட வருந்திடு மைந்தன்!'

என்றுரைத் தறிவெனும் புன லாட்டி யிவ்வுலகை
யன்றழைத்த யோவானெனு மருட்பணி யமரன்,
இன்று வந்தனன்; யார்தன்மா நதியினில் எதிர்ந்தான்
குன்றுமீதொளி யெனக்குணந் துலங்கிடுங் குரிசில்.

" அறிவெனும் புனலாட்டுக!" வென்றருகிருந்த
அறிவெனுங் கடலமர்ந்திடுமையனை யறிந்தே
"பெறவிழைந்திடும் புண்ணிய மின்றெடும் பெற்றேன்
அறமிருந்திடும் ஆண்டவன் மைந்தனே" என்றான்.

ஞானத்தீம் புன லாடினன் நாயகன்; ஆங்கு
வானவர்குழு வாழ்த்திடக் கடவுளின் மைந்தன்
தானெனத் தெரிந்தான்; வினையறிந்தனன்; சால
மானவர் பணிக் குயிரினை வழங்கிய வரதன்.

எண்ணினன் புவிவருந்திடு மின்னலைத் தீர்க்கும்
எண்ணமல்லதை யெண்ணிலன் தந்தையை நினைந்தே
"புண்ணியா வுன திச்சையே புரிந்துன தடிக்கே
நண்ணுமாறெனக் கருளுவா" யென நவிலுவனே!

## ௬. அருட்பணிச் சுடர்

வினைக்குடலெடுத்த மாற்றம் விண்டனன்; விண்ணின்றந்தை
தனக்குட லாவி தன்னைத் தந்தனன், தரணி தன்னில்
எனக்கெனும் விழைவினோடு மெனதெனு நசையு நீத்தான்;
'உனக்கெலாம் உனதேயெல்லாம் உயர்பொருளேயென்' றீந்தான்.

வேறு.

சொந்தமாகச் சுவர்க்க மிலங்கிடும்
எந்தை யிச்சையியற்றுதற் கிவ்வுடல்
வந்ததென்று வழுத்துவன் ஊனுடைத்
தந்தைதாயினர் சார்பையு நீத்தனன்.

வேறு.

உலகினிற் கொலையுங் காம மிடம்பமும் புரியுமூறும்
அலவறு பிணிகளோடு மயலவர்க் கடிமையாகிக்
குலவிடு குணங்களின்றிக் குன்றிய தரணியுய்ய
'இலதொருமருந்தோ' வென்றே ஈசனை யெண்ணி நோவான்.

அறத்தினை யறிந்தான். உண்மை நெறியினை யவனிக்கோதி
மறத்தினைக் கடிய வென்ற மனத்திடம்பூண்டே, வெய்ய
திறத்தொடு வருபகைக்குந் தெள்ளிய அன்பே காட்டிப்
பொறுத்திதம்புரியச் சாந்தப் புதுவழி கண்டானம்மா!

புலன்களை யடைத்தான்; காடு புகுந்தனன்; பசியுந்தாகம்
இலன்றுயில் துறந்தே எண்ணி ஈரிருபது நாள் நின்றே
துலங்கிய தவத்தினைத் தொடர்ந்தனன் துணிந்த சாத்தான்;
கலங்கருங் கருத்தன் வென்ற கதையினைச் சாற்றுவோமே.

## ௧௦. சாத்தானை வெல்லல்

### சாத்தான் கற்களைப் புசியெனல்

பசிமிகு விரதனைப் பழித்து 'கற்களைப்
புசியென்றான் கடவுளின் புதல்வன் நீயெனில்'

### ஏசுநாதன்

'அசனமொன் றேயல ஆண்டவன் மொழி
வசித்திட மாந்தரின் வழியதாம்' என்றான்.

### சாத்தான் நாதரை எருசலக் கோபுரத்திலேற்றி மொழிதல்.

'கோபுரத்தேற்றினன்; குதியுனக்குமத்
தேவுறு துணையெனின், தெளிவி' யென்னலும்,

### ஏசுநாதர்

'போ, உட லாசையை நீத்த புண்ணியத்
தேவரோ மயங்குவர் செல்பின் மாயையே.'

### வேறு.

பொன்றிடும் புவியின் மாயை புலத்தினை யிழுத்திடாத
வன்றிறல்வானோனென்றன்னை மயக்கிடச் சாத்தானெண்ணிக்
குன்றுடை முகட்டிலேற்றிக் குவலய முழுதுங்காட்டி
'என்றனை வணங்குனக்கே ஈகுவன் அனைத்தும்' மென்றான்.

கண்ணுற்ற பொருள்களெல்லாங் காலத்தா லழியுங் காட்சி
எண்ணுற்றே தெளிந்தோர் தம்மை யிவரோ மாயைக் கென்றும்.
மண்ணுற்ற மயக்கச் செல்வம் மாதவச் செல்வமாமோ?
விண்ணுற்ற மனத்தோரிந்த மேதினி விழைவதுண்டோ?

மல்கிடும் பொருளைக் காட்டி மயக்கிட முயலுவோய்! இப்
பல்கிடும் பூதச் சேர்க்கை பரமனி னருளாமோ நீ
நல்கிடும் புவிகளெல்லாம் நசையினை வளர்ப்ப தல்லால்,
சொல்கெடுந் தூயதெய்வச் சுகத்தினைத் துலக்கலாமோ.

## கக. பணிதொடங்கல்

மாற்றமின்றி மறைந்தது மாயையுந்
தோற்றபின் பருள் வானவர் தோன்றியே
போற்றி யந்தப் புனிதனை வாழ்த்தினர்
நோற்ற நல்லொளி நூறுபங் காயதே.

வீழ்ந்த சாத்தான் விரைந்தனன் பாரகர்
பாழ்ந்த நெஞ்சிற் பகைத்திற மூக்கினன் ;
தாழ்ந்த தீயர்முன் யோவனைத் தாக்கியே
யாழ்ந்த வெஞ்சிறை யிட்டனர் அந்தகோ !

ஈதறிந்து வருந்தின னேசுவாம்
நாதன் காபினம் நண்ணி வசித்தனன் ;
ஆதி யாண்டவன் கட்டளையால் வந்த
போத மங்கு புகன்றனன் யாவர்க்கும்.

வேறு.

வருந்துமின் பிழைகள் தம்மை ; வானகம் நணியதென்றே
திரிந்தனன் கூவி ; கேட்டோர் சீடராய்த் தொடர்ந்தார் தம்முள்
தெரிந்தபேதுரு, ஆந்த்ரூவும், ஜேம்ஸு, யோவானும், மத்தாய்
பரிந்த தாமன், பிலிப்பும், பர்தலோ மியனுஞ் சைமன்,

மற்றொரு ஜேம்ஸு, யூதாஸ் மாணவராகித் தங்கள்
நற்றவக் குருவின்றொண்டு நலமுறச் செய்தார் ; ஐயன்
பற்றறுமுறுதியாலும் பரிவுள வன்பினாலும்
இற்றல மெல்லாம் பின்னே இழுத்தனன் இன்சொலாலே.

## கஉ. மலைமீது உபதேசமும் விவிலிய விளக்கும்

பிணிகளைத் தீர்த்தான் ; நெஞ்சப் பிசாசுக ளோட்டி, நல்ல
பணிகளின் றுணையி னாலே பாரெலா மறியப் பெற்றான் ;
குணமலையானோன் ஓர்நாள் கூட்டமாய்த் தொடரச்சீடர்,
அணுகியோர் குன்றி னுச்சி அமுதவாய் திறந்திட்டானே !

இன்று மென்நாளும் பூவிற் கிலங்கிடு விளக்குபோன்ற
தன்றவன் ஆர்த்த தோடு மப்புறமுகுத்த செஞ்சொற்
கென்றவ வணக்கமீந்தே யியம்புவன் விவிலியம்மென்
றென்றுமிவ்வுலகமேத்து மெழிலுடைமறையின் சாரம் !

## விவிலிய விளக்கு

உலகின் உயிர்காள்! உயர்பொருள் உள்ளே
இலங்குங் கோயில்காள்! ஈசன் மைந்தர்காள்!
எங்கணும் பரவும் இறைவன் அரசே
உங்களுக் கெய்துக! ஓங்குக இன்பம்!
என்றும் ஆன்மா இலகிடும் உண்மை.
பொன்றும் போகமும் பொய்யுட வின்பம்.
பேரின் பத்தையே பெற்றிட முயல்வீர்.
பாரில் உடையூண் படைத்தவன் ஈவான்.
இருளை விலக்கித் தெருள்வழி சேர்மின்!
அருளும் அன்பும் அமைதியும் எய்துமின்!
திருத்தி யும்மைப் பொறுத்தே பிறரைக்
கருத்தை யுயர்த்திக் கவின்பெற வாழுமின்!
நம்பி யெவர்க்கும் நயந்தே யுதவுமின்!
வம்பும் போரும் வழக்குந் தவிர்மின்!
மற்றவர் தம்மை மதித்தே யன்பாய்
உற்றவர் போல வுலகிற் பழகுமின்!
பிறருமை யெப்படிப் பேண விருப்பத்
திறமே பிறரிடம் செம்மையா யிருமின்!
உறுதியும், அன்பும், உயர்ந்த பரிவும்,
இறைவன் இன்புடன் ஏற்கும் பரிசில்.
ஐந்தை யடக்கி யகத்தை விலக்கிச்
சிந்தையுஞ் செயலொடு செவ்விய தாக்கித்
தன்னயந் தவிர்த்தே யின்னலை விடுத்து
மன்னித் தன்பொடு மாண்புடன் வாழுமின்!
மலைக்குடில் போலும் வயல்விதை போலும்
நிலைக்கும் உறுதியில் நின்றே தழைமின்!
அன்புளோன் முத்திற் கனைத்து மீவான்
விண்பெற வெல்லாம் விருப்புளோன் விடுவன்.
ஓதிச் சுருக்கமாய் 'உண்டிலை' என்றே
யாதின் மீதுமே ஆணையிட் டுரையேல்.
நாரியர் முயக்கை நவிப்பீர் மனத்தும்.
பூரியர் உறவைப் பொய்யென நீக்குமின்!
பகைவருக் கன்பே பரிந்து காட்டுமின்!
மிகவுமைத் திருடின் மிகமிகத் தருமின்!
நண்பருக் கேயோர் நலஞ்செயல் வாணிபம்.
துன்ப முழல்வோர் துணையே யாகுமின்!
வலதுகை யீதல் இடதறியாது,
உளத்தில் தூயராய் ஊங்கறஞ் செய்மின்!

மறைவில் உதவினும் மாண்பே புலனும்
இரவிலுஞ் சர்க்கரை ஈயும் இனிப்பே.
வாழிய சாந்தர் வையம் புரப்பார்!
வாழி முயல்வோர் வான்பய னெய்துவர்!
இரங்குவோர் வாழி இரக்கம் எய்துவர்!
வருந்திடுஞ் செய்யவர் வான்பெற் றிலகுவர்!
வாழியுள் தூயர் பரதனைக் காண்பார்!
வாழிசா துக்கள் கடவுள் மைந்தர்!
மனிதரின் கோளும் வசையும் அஞ்சேல்!
மனதழுக் குற்றுமை மற்றோர் ஏசுழி
களிமின்! பொறுமின்! காட்சியாம் விண்ணில்
ஒளிபெறும் பரிசே யுமக்கே யுளதோ!
அன்புடன் றந்தையென் றையனை யேத்தி,
"உன்மயம் உலகெலாம்! உன்கருத் தாகுக!
எம் ஊண் அளிக்கும் இறைவனே! பகைவர்
தம்மை மன்னிப்பபோல் எம்மை மன்னிப்பாய்!
பிறர்க்கு யாம் காட்டும் பீடுறும் பரிவை
எமக்குநீ காட்டவே இச்சை வகிப்பாய்!
ஆசையும் நோயும் அணுகா துளத்தில்
தேசுற வுன்றுணை. திடமன மீவாய்.
தேவனே! தூயனே! எங்குந் திகழ்வோய்!
ஆவதும் அழிவதும் ஆள்வதும் உன்னால்!
உன்னதே யுலகு! உயர்படைப் பாட்சியும்
உன்ன தாற்றலில் ஓர் சிறி தாமே!
என்றுமுன் சக்தி வாழிய!" என்றே
நன்றி செலுத்தி நலமுட னுய்மின்!

வேறு.

கரும்பை மொய்த்திடு மெறும்பெனக் கருத்தொடு, நெஞ்சத்
தரும் பசிக் கமுதாகிய ஐயனின் மொழியை
விரும்பிக் கொண்டனர் அன்பர்கள் விரிவுல குய்ய
வரும்புவாக்குடை யாற்றலை யளக்கவு மாமோ?

## கரு. திருமொழித் திறம்

என்றுலக முய்யுமொழி யறமென்னும் பயிர்வளர்த்தே
இலகத், தொண்டர்
அன்று வசு தேவனுடைக் குழல்பருக ஆவினங்கள்
தொடர்ந்த தன்னர்,
நன்றிபெறு நலத்தோடு நற்பணிகள் பற்பலவும்
நாடிச் செய்தே
வன்றெண்டி னமுதுகந்த வண்டெனவே திரிந்தார்கள்
வாய்மை யோதி!

அந்தகருங் கண்டார்கள்; செவிடர்களுங் கேட்டுரைகள்
அறைந்தார் ஊமர்;
வெந்துயரக் குட்டர்களும் பிணிநீங்கிச் சுகமடைந்தார்
விளம்பற் கொண்ணு
விந்தைபெறுஞ் செயல்களுடன் மேதினிக்குப் பலவழியில்
விளைத்து நன்மை
சிந்தையினைத் தெளிவிக்குந் தேன்மதுர மொழிபேசிச்
சிறந்திட்டானே.

### யோவான் கோல்லப்படல்

யோவானை வெவ்வரசன் உயிர்பிரித்த துருகியொரு
காடு சேர்ந்தான்,
சோவாகித் தொண்டருடன்; நரியூளை யிடுநிசியில்
சோர்ந்தெல் லாரும்
நாவுலர்ந்து பசிதவித்தார்; ஐயப்பம் பலவாக்கி
நல்கிக் காத்தான்;
தேவுலகும் பூவுலகும் யாவுலகுந் திகழன்பிற்
சிறந்தான் மன்னே!

### சீடரைப் பல திசைகளிலும் அனுப்பல்

புயலடங்கு மின்மொழியால், புனிதமுறுந் தொண்டருக்குப்
புகல்வா னோர்நாள் :—
'துயிலெழுந்து நெறியறிந்து தொல்லுலக முய்யவருட்
டொண்டு செய்ய,
மயலொழிமின்! உடனெழுமின்! உடையுணவின் நினைவகற்றி
மனதைத் தேவன்
வயமிடுமின்! துயர்பொறுமின்! பயமொழிமின் பகவனருள்
மல்கி வாழ்மின்!'

என்றக் கட்டளை ஏந்திய சீடருஞ்
சென்று பற்பல திக்குகள் செப்பினர்;
அன்றுலகம் அறத்தை யறிந்ததில்
நின்றுரைத்த நிமலனைப் போற்றிட.

## கச. ஏசுநாதர் எருசலமேகல்

ஈசனாலய மென்றதை யெண்ணிலார்;
காசு வட்டிக் கறிக்கடை யாக்கியே
மோசச் செல்வர்கள் மொய்த்த வெருசலம்
ஏசு நாதனு மேகினன் வீரமாய்!

பெரு மிடம்பப் பிணியுறும் பேதைகள்
மருவு பாரகர் வாதுறுஞ் சூதினர்
பிரபு வென்னும் பெரும் பெயராளரின்
விரகப் பாட்டும் விருந்தொடு கண்டனன்.

கற்றுங் காமப் பிணியுறுங் கண்ணிலார்
முற்றும் போகமும் மோகும் பயின்றவர்
குற்ற மங்கு குறித்துரை செய்தனன்
நற்ற வத்தின் நலம்புரி நாதனே!

ஈன வெஞ்சின வஞ்ச ரிகழ்ந்தனர்;
ஞானக் கண்க ளடைத்து நகைத்தனர்;
போன போக்கில் வினைக்கள் புனைந்தனர்;
ஆனனம் மலர்ந் தார்த்தனன் நல்விடை.

வாத மிட்டவர் வாய்க ளொடுக்கினன்,
நீதி காட்டி நெறியினி லூக்கியே
போதித் தான் புரையற்ற தெருசலம்
சோதி யாக வதற்கிவன் றேன்றினன்.

## கரு. நல்லோரும் வஞ்சகரும் நாதனைப்பற்றிப் பேசல்

மனிதனேயென மாசுறு பற்பலர்,
புனிதனென்றனர் புண்ணிய நெஞ்சினர்;
சனியனென்றனர் பாரகர் தாமதர்;
இனியனென்றனர் எண்ணுறு மன்பரே;

தூறு பேசினர் தோமுறு நெஞ்சமுக்
காறு பேசினர் ஆழ்ந்த வகந்தையர்;
ஊறு செய்திடச் சூழ்ந்தனர்; உண்மையின்
ஆறு நிற்க வகல்மன மற்றவர்.

அந்த நாளி லரசு செலுத்திய
பொந்தி யூவாம் பிலாத்திடம் போந்தனர்,
எந்தம் வேந்த இழிந்த குலத்தினன்
தந்திரச் செயல் சாற்றுனங் கேட்டியால்!

யூதர் மன்னவன் ருனென் றுரைக்குனன்,
வாதில் வெல்லுனன் வஞ்சக மிஞ்சினன்
தீதும் பொய்யுந் திருட்டிகல் பேசியெம்
மாதி மார்க்க மழிக்குனன் மாற்றவன்!

வேறு.

மனத்திறல் படைத்தனன் மறுக்குன னுனேத்தான்,
நினைக்கிலன்; பழித்தனன் நிசத்தினை யொளித்தான்.
தனத்திறல் படைத்தவர் சருப்பமொடு பாவி
எனப்புகலு கின்றன னிகல்புரி பகைவன்.

## கசு. பொந்தியூபிலாத்து வினவல்

அச்சமறு மம்மனித ருெரென வினவத்
தச்சுபுரி யேழையொரு தந்தைவளர் மைந்தன்
இச்சைபுரி யேழையர்க ளெண்ணிலர் அவன்பால்
மிச்சையொடு செல்லுவர் மிகுந்தபணி செய்வார்.

வாய்மொழியின் மாயவலே மாந்தரிடை வீசித்
தாய்மொழியர் தம்மன மிழுத்து தகைவுற்றுன்,
தூயவன், இறைவனவன் சொல்மறையென் றேத்திப்
போயினர்கள் மோசமிவன் புண்ணியனென் றெண்ணி.

வேறு.

தேசுலாவுந் திருமுகச் சீருளான்
ஏசுநாதனென் றேத்திடப் பெற்றவன்
காசினியைக் கவர்ந்திடுங் கள்வனே
பேசு வார்த்தைகள் பேசிடவல்லவோ?

சீடரோடவன் சேர்ந்துறைச் சூழலைத்
தேடி யன்னவன் வெம்பகை தீர்த்திடேல்
நாடு நின்னது வில்லையிந் நாட்டினர்
ஓடு கின்று ரவன்மருங் கூக்கமாய்

வேறு.

'கள்ளனைக் கொணருக' வென்று காவலன்
மெள்ளவும் புகலவும் விரைந்து சென்றனர்;
வெள்ளிமுப் பதுகொடு விலைக்கு வாங்கினர்
உள்ளத்தை விற்றயூ தாசு தன்னையே.

## கஎ. இறுதி யுண்டி

அறிவு கொண்டற மோங்கினர் பாரினர்,
அறிவு நீங்கி யகந்தையிற் பாரகர்
செருவு செய்திடுந் தீமைக் கிரங்கியே
யிறுதி யுண்டி யிராவினிற் கொண்டனன்.

ஏசுநாதர் சொல்வது

பன் முறைகள் பகர்ந்தனன் பாரகர்
இம் முறையி லிகலுடன் நண்ணுவர்
நம் மினத்தரில் நாணய வாசையால்
வெம் முறைக்கெனை வீழ்த்துவ னுள்ளனல்.

யூதாஸ்

அத்தகையவன் யாவன் யானுவென
மெத்த யூதாஸ் விதிர்த்து விளம்பிட
அத்தன் ஆமென் றமைதியிற் பேசினன்
சித்தந் தப்பிடுஞ் சீடனு முள்ளனே.

கோழி கூவுமுன் பேதுரு கூசிடா
தேழையேனை மறுத்துரை செப்புவன்
சூழும் பாரகர் துன்பச் சிலுவையில்
வாழ மாட்டுவர் வாய்மை விளங்கிட.

மூன்று நாளி லெழுகுவன் முந்துமிவ்
வான்ற வாய்மை யறைந்தன னென்றனன்
சான்றவன் பரத் தந்தையை யெண்ணியே,
ஊன்றினன் தவயோகத் துறுதியில்.

## கஅ. இறுதித் தோத்திரமும், இகலவர் பிடித்தலும்.

உன்னதே யாக்கையும், உன்னதே யென்மனம்,
உன்னதே யாவையும், உன்னதே யாட்சியும்,
உன்னதே செய்கையும், உன்னதே உய்வதும்,
உன்னதே இன்னலும், உன்னதே இன்பமும்!

என்னுளும் முள்ளனை என் புறம் முள்ளனை
அன்பிலா வெய்யர்பால் அன்புடன் னுள்ளனை.
துன்பிலும் இன்பிலும் தோன்றுவை தூயவ!
உன் மனம் மாகுக! உன் சரண் யானரோ!

உன்பணிக் கென்றனின் ஊனுடல் போயிடின்
அன்புடன் னுவியா யண்டுவன் னுன்னிடம்
புன்புலால் மேனியே போயிடின், உன்பதத்
தின்பதம் மெய்திடின் இன்னலென்? இன்பமே!

வேறு.

என்றுதன் னுத்தும சக்தி யெண்ணினன்;
வன்றவக் கதிரினை வஞ்சர் வெம்படை
குன்றுடைக் கோட்டைபோற் குலவ, யூதஸனும்
தன்றிருக் குருவினைத் தழுவிக் காட்டினன்.

வேறு.

பட்டனன் பகைவர் கையிற் பரிதியி னொளியை மேகஞ்
சுற்றிலுஞ் சூழ்வபோன்றோர் சூதினை யுரைத்த நாதன்
நற்றுணைச் சீடர் கோபங் கொண்டனர் நகைத்தே ஐயன்
சற்றுநின் றமைதியோடு சாற்றுமுன் பொறுமையற்றே,

மின்னொளிபோன்று சீமோன் வீசினன்வாளை; மற்றோன்
இன்னலர் தம்மை வீழுத்த வுத்திர விரந்து நிற்க,
கன்மன முருகுமன்பாற் கருணையிற் கனிந்த சொல்லால்
தன்மமே யுரைத்தான் அன்னோன் தண்ணருள் சிறக்க
[மாதோ!

## ௧௯. ஏசுநாதரின் தேசுறு மொழிகள்

'என்றென தாவியும் ஈசன் ஆணையை
நன்றுறச் செய்திட நாடி வந்ததோ,
அன்றென தனைத்தையும் அவன்கை யீந்தனன்
இன்றிவர் பிடித்ததும் இறைவ னெண்ணமே.

பாரகர் செய்திடும் பல் விடும்பைகள்
சீரிய தேகியைச் சிதைக்க வல்லவோ?
சோருடல் போயிடின் சோதி சேர்ந்திடும்
ஆருயி ருடலுடை ஆண்டவன் பதம்.

எந்தையின் கட்டளை யியற்ற வென்கறை
சிந்துதல் தன்னிலும் சீர்மை யாதுகொல்?
வந்தமென் வாய்மையும் வலிவு காட்டியே
சந்தத மாகிடுந் தருண மின்றரோ!

சாவினிற் பயமில்லை சட்டை மாற்றமே
சோவினில் துயரில்லை தூய ருக்கரோ
பூவெலா மீயினும், பொன்றி டாததாம்
ஆவியை விற்றலு மாண்மை யாகுமோ?'

* * *

இன்னல்செய் பகைவரே யிற்று சற்றினில்
மண்ணொடு தூசியாய் மங்கி மாய்வரே;
புன்னகை புரிந்ததைப் பொறுத்த போதகன்
மன்னுவன் றேவென மண்ணும் விண்ணுமே.

ஆதலால் வலிவுள வஹிம்ஸையின் னறம்
ஈதலால் அறஞ்செய இனியதில்லையால்,
தீதினை விடுத்தறஞ் செய்குவீரெனப்
போதனை செய்துமே புனித னேகினன்.

## ௨௦. காபாமுன்

தன்னின யூதர் கையில் தனியனாய்ச் சிக்கி யன்னோர்
கன்மனக் கொடுமை யெல்லாம் கருணையோ டணிந்து தாங்கு
மன்னனைப் பாரகர் தங் குருவிடம் வலித்துச் சென்றார்;
அன்னவன் வெய்யகேள்விக் கமைதியாய் விடையளித்தான்.

பழித்தனன் காபா 'கொள்கை பகரென' வறைந்தான், ஐயன்
'ஒளித்தில னென்றும் அன்றே யுலகெலா மறியச்சொன்னேன்
அளித்தனன் நலமே' யென்ன அறைந்தனன் 'எங்களாசான்
மொழித்ததற் கெதிர் சொல்வாயோ' என்றொரு முரட னம்மா.

தீதெலாம் பொறுத்தான்; தன்னைச் சேர்ந்திடுஞ் சொந்த நாட்டின்
யூதரே ஒறுக்க 'இல்லை. உணர்ந்திலனிவனை' யென்னப்
பேதுருதனை மறுக்கப் பேசுவார் ஏசலெல்லாம்,
வாதிலாப் பொறுமையோடு வகித்தனன் பகைக்கும் அன்பன்.

"பாதகம் புரிந்தே னிந்தப் பணத்தினாற் பாவியானேன்
ஈதிது என் கைவேக எரித்திடும்; ஏல்மின் மீண்டும்
கோதிலாக் குருவை விட்டு விடுமின்கள் கோகோ" வென்றே
யூதஸும் அலறி நொந்தே யோடின னுயிரை நீத்தான்.

வேறு.

கட்டுண்டு காபாவிற் கல்நெஞ்சர் துப்பிடவே கனல்வாய் கக்குந்
திட்டுண்டு திருடனெனச் செப்புண்டுந் திருவற்ற தீயோர்தம்பாற்
கொட்டுண்டும் பொறுமையொடு குறைகடற்கும் அமைதியினைக்
[குறித்த வேந்தன்
பட்டுண்ட பாட்டிற்குப் பஞ்சுபடும் பாடெந்தப் பங்கே யம்மா!

பொருளாசை வேதியரும் புலையாசைச் சதுசயரும் புல்லிச்
[சூழ்ந்தே
இருள் புதைந்த சிறு மனத்தர் இறப்ப திவன் றருமமெங்கள்
[இறைவ வென்றே,
அருள் விளங்கும் அமரனையே அந்தகோ அயலரசின் அகந்தை
[செய்த
வெருவு துயர்க் கடற் சுழியில் வீழ்த்திடவே 'அரசாங்கப்
[பகைவன்' என்றார்.

வைவார்கள்! கிறித்து நீயோ! இறைவன் நீயோ தான் வஞ்ச
[வென்றே
பெய்வார்கள் கேள்வி பல. பொறுமையே துணையான பெரியோன்
[றன்னை
எய்வார்கள் மொழியம்பால். 'ஏசுநான்' என வையன் இயம்பக்
[கேட்டே
பொய்வாய னென்றவனைப் பொங்கியோ விடங்கொண்டு புகுத்
[தினரே.

## உக. விசாரணை

பேதுரு மறுத்தான் பின்பு பிரிவருந் துயருட் புக்கான்,
தீதுறு யூதாசுந் தான் செய்வினை நொந்து மாண்டான்;
கோதறும் பசுநின் றன்னக் கொடுவரிக் கூட்டஞ் சுற்ற,
வாதமிட் டொலிப்போர் நாப்பண் வாய்மையோ டிலகி நின்றான்.

தன்னின மனிதர், கோமுன் றனியனை நிறுத்திக் காட்டி
'மன்னவன்றானே யென்ற மமதையைக் காண்பீர்' என்பார்
உன்னத நாகரீகர் தம்மையே உரகமென்றான்
உன்னர சிகழ்ந்தான் றன்னை யுயிரொடும் விடுத்தலாமோ?

வைதனர்; வாய்வராத வார்த்தையாம் அம்புமாரி
பெய்தனர்! 'சிலுவையேற்றல் பெரிதெனப் புகலோம்; இன்னோன்
செய்ததோர் தீவினைக்குச் சிறியதோ ரிடும்பை' என்றே
கைதவர் சொல்ல மெய்யன் கலங்கிலன் அமைதியானான்.

எண்ணினன் எதிரில் நின்ற எழிலினை; சிலுவை யேற்றக்
கண்ணிலன் காணேனென்று கலங்கின னியற்கையாகப்
புண்ணியம் பரிந்த வன்பாற் புகுந்தது; காவலாளன்
நண்ணினன் மனைவிமாட்டு நவிலுவள் நல்லாளாங்கே!

'நாதவோ தேவமைந்தன் நசரயனானன் அன்னோன்
பேதுரு முலக முய்யப் பிறந்தவன் பிழையேல்' என்றே
ஓதலும் உற்றான், கையைக் கழுவியே 'உரையே னென்றும்
ஏதுறும் அதற்கு நீரே' என்றனன் ஏகினனே.

### வேறு.

உடலெங்கும் ஊற்றுவைத் தோடும் புண்ணினீர்
குடலெலாங் கருகிடக் கொடுமை செய்தவர்,
படுவதைப் படுத்தியும் பரிவிலாதவர்,
விடுதலை செய்திடின் சீறும் வேந்தெனு,

செப்பினன் றனையிவன் றேவ மைந்தனென்
றிப்பிழைக் கிவன் றனைச் சிலுவை ஏற்றுதல்
ஒப்பிய வெம்மர போதுந் தண்டனை
தப்பிடலதை யிவன் றகுதியன் றென்றார்.

'பகையிவ னல்ல' வென்றே பரிவுட னுரைத்தான் மன்னன்
தொகையறும் பாரகர்தந் தொனியுடன் எழுந்து பொங்கி
'மிகை செய்தான் சிலுவை செய்க!' வேந்த வென்றார்த்தலோடுந்
தகைவனைக் கொடியர் கையில் தந்துதான் ஒதுங்கினனே.

## உஉ. பழிச் செயல்

பச்சிள மானைச்சுற்றும் படுகொலைப் புலிகள்போன்றே
நச்சுறு நெஞ்சினோடு நாதனை வளைத்து நின்றே
கொச்சைகள் யூதர் ரோமர் கொடுஞ்செயல் புரிந்த மாற்றம்,
அச்சகோ! எண்ணும்போதே யகந்துடித் தழுங்குமன்றே!

வேறு.

முண்முடி சூட்டினர், மூங்கி லீந்தனர்,
புண்படு மேனியிற் புனைந்து செவ்வுடை,
எண்கடந் தேசினர், இன்னல் கைத்திட
மண்படு மருளினர் மமதைக் காளரே.

துப்பினர் திருமுகம்; தூய மேனியில்
தப்பினர் பிரம்பினல், தளரக் கைகளே
அப்பமாய் வீங்கிய தையன் மேனியே
அப்படு பாவிகள் அகந்தை வீங்கிற்றே.

ஆர்த்தனர் அகத்தினில் அந்த காரமே
போர்த்தவர்; ஐயன்மேற் புண் படுத்தியே
சாத்தினர் சிலுவையை; கொல்கத் தாவினைப்
பார்த்தனர் பாதகர் பழியு மஞ்சவே!

வேறு.

நாதனின் புண்ணீரோடு நல்லவர் மனதுநோக
மாதரின் கண்ணீரோட மன்னுயிர் துடிக்கக் கண்டோர்
தீதிது பழியி தென்றே தெவ்வரின் கொடுமை பேச
யாதொன்றுங் காணார் வெய்ய வகந்தையிற் புதைந்த நெஞ்சார்.

## உரு. சிலுவையிடல்

மோரிய மலையினில் மொய்த்துக் கூடினர்
ஆரவாரத்தொடும் அழி மகிழ்வினர்.
பாருடைப் பாவங்கள் பரிந்து தாங்கிய
சீருடைச் செல்வனைச் சிலுவை யிட்டனர்.

வேறு.

திருக் கரங்களில் ஆணிகள்! செவ்விய
திருப்பதங்களில்; சென்னியி லாணியே!
இருப்பு நெஞ்சு மிரங்கிடும் பாரகர்
வெறுப்பு நெஞ்சிரங் காதது விந்தையே!

வேறு.

'சீலன்யான் றெய்வ மைந்தனென் றேற்றமாய்ச்
செப்பி யன்று சனியனை யோட்டினே!
ஆலயத்தை யிடித்து முந்நாட்களில்
அமைப்ப னென்றிறு மாப்புகள் பேசினே.
ஆளுமெங்க ளரசனென் றூர்த்தனே
அன்னதாயின் சிலுவையி னின்றின்னே
கீழிறங்கிடு' என்னக் குறைத்தனர்
கேடுசூழ் மதிக் கெங்குறும் நீதியே!

வேறு.

நெற்றி, கை, காலிலாணி புகுத்தியே நிமலன்றன்னை
மற்றிரு கள்வர் நாப்பண் மாட்டினர் சிலுவை தன்னிற்
சிற்றறி வாளர் நக்கார்; சிறந்தவன் 'இறைவ இன்னோர்
குற்றமென் றறியாச் செய்தார் குளிர்ந்து மன்னிப்பீர்' என்றான்.

## உச. ஆவியாதல்

'கடவுளே கடவுளே ஏன் கைவிட்டாயென்றான்' 'தாக
விடை' யென்றான்; முற்றுபெற்ற தென்றனன் வீயும்போது;
திடமுடன் "அப்பனே உன் திருக்கர மென்றனுவி
கொடுத்தனன்" என விடுத்தான் கோதிலான் ஆவியானுன்.

மண்ணெலாங் கண்ணீர் வெள்ளம்; மனமெலாந் துயரவாரி;
புண்ணினில் அனற்கோல் ஆழப் புகுந்ததுபோல வெம்பிக்
கண்ணுற்ற அன்ப ரந்தக் கருணையே வுருவெடுத்த
புண்ணிய னுடலந்தன்னைப் புதைத்தனர் பாறைப் பொந்தில்.

### மீண்டெழுதல்

மூன்று நாட்கள் முடிந்தன ; பூவினுக்
கீன்ற ஆவி பிறங்க வெழுந்தனன் ;
ஆன்ற அன்பர் அறிந்து வியந்திடத்
தோன்றி னுனிருந் தூயவன் சோதியாய் !

மகிழ்ந்து கண்டனள் மாக்தெலினு வுடன்
புகழ்ந்து பார்த்தனர் புண்ணியச் சீடர்கள் !
திகழ்ந்து காட்டினன் தேசுறு மன்பர்க்கே !
நிகழ்ந்த செய்கை நிறைந்தது நீணிலம்.

கண்ட தொண்டர் களிக்கட லாடிட
விண்டனன் "உமை விட்டகலே னிந்த
மண்ட லத்திற் கறப்பணி மாண்புடன்
கொண்டு செய்வதுங் கொள்கை" யென் றேகினன்.

தொழுது நாதனைச் சொன்மனஞ் செய்கையிற்
பழுதிலா தமைத்தார் ; பணி சூடினர் ;
எழுதி னூர்கள் இறைவன் சரிதை மண்
முழுது மார்த்திட முன்னவ னன்பினே.

## உரு. அன்பர் போற்றல்

மரணத்தை வென்றவனே !
மன்னவனே ! அன்புருவே !
தரணியுய்யப் பிறந்தவனே !
தாவீ தரசன் குலக் கொழுந்தே.
கருணையுட னவதரித்தாய் !
காத்திடவே மெய்யறத்தை
அரணெமக்குன் திருவருளே
அறிவெல்லா மமர்ந்தவனே !

வேறு.

கோதறுங் குணமே யென்கோ ! குவலயத் தொளியே யென்கோ !
போதமெய்ப் பொருளேயென்கோ ! புண்ணியக் குருவே யென் [கோ !
யூதரின் அரசே யென்கோ ! உயர்பெருந் தவமே ! யாவி
பூதலமுய்ய வீந்த புனிதனே பொறையே யென்கோ !

நலத்தினைப் பழகிக்காட்டி நன்னெறித் தவத்தி லோங்கி
நலத்தினை மாந்தருய்ய நவின்றனை யன்பினாலே;
நலத்தினை யறியா மாக்கள் நவிலருங் கொடுமை செய்ய
நலத்தினை யறியக்காட்ட நல்கினை பலியா யுன்னை.

உன் பெயராலே யிந்த வுலகினி லுயிர்ப்போம்! நாங்கள்
உன் பெயராலே யுண்போம், உன்னருள் சிறக்க வாழ்வோம்,
உன் பெயராலே யெங்கும் உத்தமத் தொண்டு செய்வோம்,
உன் பணித் திறத்திற்கெங்கள் உழைப்பெலாம் ஈந்து வாழ்வோம்.

வேறு.

என்று பற்பல மாற்ற மியம்பினர்;
அன்பர் பற்பலர் ஆண்டவன் கட்டளைத்
தொண்டு பற்பல தொல்லுல கெங்கிலும்
விண்ட வாய்மை விளங்கிடச் செய்தனர்.

Q6:33
N27

வேறு.

மாண்புறு வாய்மைக்காக மனதுடலாவி யீந்தோன்
ஊன்றினை வகற்றிக் காம வுணர்வறும் வன்னியாகத்
தேன்மொழி வாய்மை காட்டித் திகழுவன் அமரனாக!
காண்கிலர் கொடிய புல்லர்; கருணையோன் என்று முள்ளான்.

சிறுமனத் தழுக்கினாலே செல்வத்தின் செருக்கினாலே
பொறுமையே பூணு நல்லோர்க் கிடர்பல புரியும் புல்லர்
சிறை, கொலை, மானபங்கம் செய்குவர்; சிரிப்போடாங்கே
யிறந்தவர் சக்தி யின்னும் இருபது கோடி யாமே!

உலகமே சிலுவை; ஆன்மா உயர்பெரும் ஏசுநாதன்;
கொலை மனப் பூரகர்தாம் குவலய மாயை மைந்தர்;
கலகஞ்செய் சாத்தானுக்குக் கருத்தினை விற்றோர் செய்த
அளவிலாக் கொடுமை தாங்கி அமரவாழ் வெய்தினானே.

வேறு.

வாழி யன்புட னருட்பணி வாய்மையும் பொறையும்!
வாழி நல்லற மாண்புடை வானவர் மொழியே!
வாழி மன்பதைக் கொளிதரும் வாழ்வுடை யமரர்!
வாழி தூய்மையும் தூயரும் மனந்தொறும் வாழி!!

ஏசுநாதர் சரிதை முற்றிற்று.

85958

---

C. L. S. PRESS, MADRAS—1927

### சென்னபட்டணத்துச்

### சன்மார்க்கச் சிறு புத்தக சங்கத்தார்

## விற்பனைசெய்யும் புத்தகங்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| எரேமியா தீர்க்கதரிசியும் தீர்க்க நெஞ்சனும். Jeremiah Prophet and Hero ... ... ... ... | 0 | 8 | 0 |
| மெய்ப்பொருள் விளக்கம். Reality and Religion ... | 0 | 4 | 0 |
| இரக்ஷணிய மனோகரம். Rakshanya Manoharam (The Joy of Salvation) ... ... ... | 0 | 10 | 0 |
| பூர்விக திருச்சபையும் நிகழ்கால இந்தியாவும். The Ancient Church and Modern India ... | 0 | 11 | 0 |
| பிரான்சிஸ் மகாத்மாவின் சரித்திரம். St. Francis of Assisi ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| பிரிஸ்கில்லாளும் அவள் தோழர்களும். Priscilla and her Companion ... ... ... ... | 0 | 3 | 0 |
| திருமாளிகைத் தூண்கள் Pillars of the Church Part I... ... ... ... ... ... | 0 | 8 | 0 |
| திருமாளிகைத் தூண்கள். Pillars of the Church Part II ... ... ... ... ... | 0 | 8 | 0 |
| விசுவாசத்தின் அப்பியாசம். The Exercise of Faith ... ... ... ... ... ... | 0 | 2 | 6 |
| மெய்க்குணப்படுதல். True Repentance ... | 0 | 2 | 0 |
| இரண்டு எருசலேம் பிரயாணிகள். The Two Pilgrims to Jerusalem ... ... ... | 0 | 2 | 0 |
| ஆமோஸ் தீர்க்கதரிசன புஸ்தகம். The Book of Amos ... ... ... ... ... ... | 0 | 12 | 0 |
| கர்த்தருடைய ஜெபம். The Lord's Prayer ... | 0 | 6 | 0 |
| நமது தினஜீவியமும் தெய்வ பக்தியும். Our Daily Life and Religion ... ... ... ... | 0 | 6 | 0 |
| சாது சுந்தர் சிங்: தெய்வ அழைப்பைப் பெற்றவர். Sadhu Sundar Singh : Called of God ... | 0 | 8 | 0 |